843. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் எந்த ஆண்டு தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டது?

A) 1980 B) 1990 C) 1970 D) 1960

**(Group I – RDGA-2010)**

844. 'செல்வச் சுரண்டல் கோட்பாட்டை' தந்தவர்

A) இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்கள்

B) தாதாபாய் நௌரோஜி

C) வீரா ஆன்ஸ்டி

D) வி.வி.பட்

**(Group I – RDGA-2010)**

845. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி பயன்படுத்தும் கருவி

A) ரிபோ வீதம் மற்றும் பண இருப்பு விகிதம் அதிகரித்தல்.

B) ரிபோ வீதம் குறைத்தல் மற்றும் பண இருப்பு விகிதம் அதிகரித்தல்.

C) ரிபோ வீதம் குறைத்தல் மற்றும் பண இருப்பு அளவு குறைத்தல்.

D) வங்கிக்கு தரும் வட்டி வீதத்தை குறைத்தல்.

**(Group I – RDGA-2010)**

846. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி :

கூற்று (A) : குடிமையியல் நிர்வாகத்திற்கும், இராணுவத்திற்கும் அதிகமாக செலவு செய்வது வரவேற்கத் தக்கது அல்ல.

காரணம் (R): இந்த இருதுறைகளும் நாட்டின் நிலையான வருமான வளர்ச்சி ஈட்டும் சொத்துக்களாக உருவாவ தில்லை.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

C) (A) மற்றும் (R) இரண்டுமே தவறு.

D) (A) சரி ஆனால் (R) தவறு.

**(Group I – RDGA-2010)**

847. பாரத பிரமரின் வேலை வாய்ப்புத் திட்டம் (PMEGP) இந்தியாவில் கிழ்க்கண்ட திட்டங்கள் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டது?

A) பாரதப் பிரதமர் வேலை வாய்ப்புத் திட்டம் (PMRY) மற்றும் கிராமிய வேலைவாய்ப்பு (REGP).

B) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP) மற்றும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP).

C) இந்திரா குடியிருப்புத் திட்டம் (IAY) மற்றும் கிராமிய ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் (IRDP).

D) சிறுவிவசாயி முன்னேற்ற திட்டம் (SFDA) மற்றும் குறுவிவசாயி முன்னேற்ற திட்டம் (MFAL).

**(Group I – RDGA-2010)**

848. இந்தியா விடுதலை பெற்ற 50-வது ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம்

A) மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம்

B) எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

C) பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம்

D) ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம்

***(VAO – KALI - 2011)***

849. சமுதாய முன்னேற்றத்தின் விளை நிலம்

A) பள்ளி B) கல்லூரி

C) பல்கலைக் கழகம் D) அலுவலகம்

***(VAO – KALI - 2011)***

850. "ஆப்ரேஷன் ஃபிளட்" என்ற திட்டம் எதனுடன் தொடர்புடையது?

A) பால் உற்பத்திப் பெருக்கம்

B) நீர்வள மேம்பாடு

C) வெள்ளத்தடுப்பு

D) கோழி வளர்ப்பு மேம்பாடு

***(VAO – KALI - 2011)***

843 ...... A 844 .... B 845 ..... A 846 .... B 847 ...... A 848 ..... D 849 ..... A 850 .... A

**851.** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

A) *2007*✓ B) *2009*
C) *2010* D) *2008*

***(VAO – KALI - 2011)***

**852.** இந்திய ரிசர்வ் வங்கி, வங்கியராகவும், முகவராகவும் செயல்படுவது

A) உலக வங்கிக்காக
B) பன்னாட்டு பண நிதிக்காக
C) இந்திய அரசுக்காக✓
D) பன்னாட்டு நிதி கழகத்திற்காக

***(VAO – KALI - 2011)***

**853.** கரீபீ ஹட்டா என்பதன் பொருள்

A) வேலையின்மை B) வறுமை அகற்றல்✓
C) பசுமைப் புரட்சி D) சேவைகள்

***(VAO – KALI - 2011)***

**854.** ஆறு மாதத்திற்கு மேலாக உள்ள காசோலை பின்வருமாறு அழைக்கப்படுகிறது

A) காலக்கெடு முடிந்த காசோலை
B) பின்தேதியிட்ட காசோலை✓
C) சாதாரண காசோலை
D) கிறலிட்ட காசோலை

***(VAO – KALI - 2011)***

**855.** *11*-வது ஐந்தாண்டு திட்ட காலம்

A) *2006-2011* B) *2007-2012*✓
C) *2008-2013* D) *2005-2010*

***(VAO – KALI - 2011)***

**856.** ஒரு இந்தியனின் தலா வருமானம் என்ன?

A) $ *1040* B) $ *370*✓
C) $ *250* D) $ *560*

***(Forest Apprentice – GSIX - 2011)***

**857.** பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம்

A) *2004-2009* B) *2007-2012*✓
C) *2005-2010* D) *2006-2011*

***(Forest Apprentice – GSIX - 2011)***

**858.** பொருளியலின் சராசரி வளர்ச்சியைக் கண்டறியப் பயன்படும் சரியான சராசரி

A) எடையிட்ட சராசரி B) பெருக்குச் சராசரி
C) கூட்டுச் சராசரி✓ D) முகடு

***(Forest Apprentice – GSIX - 2011)***

**859.** பொருளாதாரத்தின் 'நிகர மதிப்பு' என்பது

A) கடனும், பாதுகாப்பு நிதியும்
B) வங்கிக் கடனும், அரசாங்க கடன் பத்திரங்களும்
C) பங்கு மூலதனமும், பாதுகாப்பு நிதியும்✓
D) பங்கு மூலதனமும் வங்கி கடனும்

***(Forest Apprentice – GSIX - 2011)***

**860.** ஊழல் தொடர்பான சந்தானம் குழுவின் முக்கிய நோக்கு

A) அரசு துறைகளில் உள்ள ஊழல்✓
B) நீதித்துறையில் உள்ள ஊழல்
C) உள்ளாட்சி அரசுகளில் உள்ள ஊழல்
D) கல்வி நிறுவனங்களில் உள்ள ஊழல்

***(Forest Apprentice – GSIX - 2011)***

**861.** நேரடி பார்வை முறை எங்கு பயன்படுத்தப் படுகிறது?

A) முதல்நிலை விவரம்✓
B) அலைவெண் பரவல்
C) தன்மதிப்பு நிலை விவரம்
D) இரண்டாம் நிலை விவரம்

***(Forest Apprentice – GSIX - 2011)***

**862.** தேசிய வருமான வளர்ச்சி வீதத்தை தீர்மானிப்பது

A) முதலீட்டு வருமான விகிதம்
B) மக்கட் தொகைப் பெருக்க வீதம்
C) உற்பத்திப் பெருக்க வீதம்✓
D) பண்ட நுகர்வு விகிதம்

***(Forest Apprentice – GSIX - 2011)***

**863.** 'முதலீட்டு விற்பனை' என்றால்

A) அரசாங்க குழுமங்களின் விற்பனை
B) பொது நிறுவனங்களில் உள்ள அரசின் பங்கு விற்பனை✓
C) நலிவடைந்த தொழிற்குழுமங்களின் விற்பனை
D) அரசாங்க குழுமங்களை தனியாருக்கு விற்பனை செய்தல்

***(Forest Apprentice – GSIX - 2011)***

**864.** இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

A) *1935*✓ B) *1949*
C) *1950* D) *1957*

***(Gr.IV (Special Test) – SAMU - 2011)***

851.......A 852....C 853.....B 854....B 855......B 856.....B 857.....B 858....C 859.....C 860.....A
861.....A 862....C 863.....B 864.....A

865. இலாப நோக்கத்திற்காக செயல்படாத வங்கியினை குறிப்பிடுக.

A) ஆந்திரா வங்கி

B) இந்திய ரிசர்வ் வங்கி

C) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

D) கனரா வங்கி

*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

866. தேசிய வருமானம் ஒரு

A) மத்திய அரசின் வருமானம்

B) மத்திய மற்றும் மாநில அரசின் வருமானம்

C) மொத்த காரணி வருமானம்

D) பொதுத்துறையின் இலாப வருமானம்

*(Gr.IV (Special Test) - SAMU - 2011)*

867. கீழ்க்கண்டவைகளில் எவை சரியாக பொருத்தப் படவில்லை?

A) நாடுகளின் செல்வம் - ஆடம் ஸ்மித்

B) வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றி ஒரு பொதுக் கோட்பாடு - கீன்ஸ்J.M

C) நாணய மேற்கோடு - குரோத்தர்

D) அதிக பணம் குறைந்த பொருட்களை துரத்துவது - மில்டன் ப்ரைடுமேன்

*(Group - I A - THOL - 2011)*

868. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையைத் தேர்ந்தெடு:

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| a) **BASEL II** | 1. வெளியிருப்பு கடன் |
| b) **SEBI** | 2. காப்பீட்டு திட்டம் |
| c) **NPA** | 3. மூலதன சந்தை |
| d) **IRDA** | 4. வங்கி மறுமலர்ச்சி |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

*(Group - I A - THOL - 2011)*

869. இந்திய அரசால் எந்த ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது பசுமைப் புரட்சி என்று கூறப்படுகிறது?

A) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம்

B) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

C) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்

D) எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

*(Group - I A - THOL - 2011)*

870. மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் எந்த குழுவின் பரிந்துரையால் உருவாக்கப்பட்டது?

A) கோத்தாரி குழு B) சந்தானம் குழு

C) சர்க்காரியா குழு D) இராஜமன்னார் குழு

*(Group - I A - THOL - 2011)*

871. பகிரங்க வேலையின்மையென்பது

A) வேலை செய்ய விரும்பாதோர்களை குறிக்கிறது

B) விரும்பியும் வேலை கிடைக்காதோர்

C) மேம்பட்ட வேலை தேடி இருக்கின்ற வேலையை கைவிட்டோர்

D) ஊழல் பழக்கத்தால் வேலையை விட்டு நீக்கப் பட்டோர்

*(Group - I A - THOL - 2011)*

872. "செலவிட இயன்ற வருமானம்" என்றால் என்ன?

A) தனிநபர் வருமானம் மான்யம் நீங்கலாக

B) வரி செலவு போக உள்ள நிகர வருமானம்

C) தனிநபர் வருமானம் மாற்று செலவு நீங்கலாக

D) தேசிய வருமானம் தேய்மானம் நீங்கலாக

*(Group - II - WAKA - 2011)*

873. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அதிக அளவு பங்கினை இன்றும் அளித்து வருவது

A) வேளாண்மை

B) தொழில்சார்ந்த உற்பத்திதுறை

C) கட்டுமானத்துறை

D) சேவைத்துறை

*(Group - II - WAKA - 2011)*

874. பண சுழற்சி வேகத்தை கட்டுப்படுத்தாத கூறுகள்

A) பணபுழக்க அளவு

B) வணிக நிறுவனங்களின் விற்பனை மதிப்பு

C) கடன் வசதிகள்

D) வாணிபச் சூழல்

*(Group - II - WAKA - 2011)*

865......B 866....C 867.....C 868 .... B 869 ......A 870.....B 871..... C 872 .... B 873... D 874 ..... C

875. படங்கள் மற்றும் வரைபடங்கள் எதற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன?
A) புள்ளி விவரங்களை சேகரிக்க
B) பகுப்பாய்வு செய்ய
C) பார்வைக்குகந்த முறையில் வைக்க
D) தொகுக்க

*(Group – II – WAKA - 2011)*

876. இந்திய அரசால் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (NREP) எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
A) 1978 B) 1979
C) 1980 D) 1982

*(Group – II – WAKA - 2011)*

877. SARFAESI சட்டம் எந்த நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டது?
A) பங்குச் சந்தையை கட்டுப்படுத்த
B) மூலதனச் சந்தையை ஒழுங்குபடுத்த
C) நிதித்திட்டத்தை சீர்செய்ய
D) வங்கிகளின் எண்ணங்களை செயல்படுத்த

*(Group – II – WAKA - 2011)*

878. அகன்ற பணம் என்றால் என்ன?
A) மக்களிடம் கைவசம் இருக்கும் நோட்டு+ மக்களின் தேவை வைப்பு
B) மக்களின் கைவச நோட்டு+அஞ்சல் நிறுவனம் சேமிப்பு வைப்பு
C) மக்களின் கைவச நோட்டு+வங்கிகளின் பொதுகால வைப்பு+தேவை வைப்பு
D) மக்களின் கைவச நோட்டு+வருவிக்கும் வைப்பு

*(Group – II – WAKA - 2011)*

879. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் சட்டம் 100 நாட்கள் வேலை கொடுப்பதற்காக ..........ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
A) 2003 B) 2004
C) 2006 D) 2002

*(Gr.I) – IDPC - 2011)*

880. கீழ்க்கண்டவைகளில் அதிகமாக நாட்டு உற்பத்திக்குக் (GDP) காரணமாக இருப்பது
A) விவசாயம் B) தொழில்துறை
C) சேவைகள் D) ஏற்றுமதி

*(Gr.I) – IDPC - 2011)*

881. கீழ்க்கண்டவைகளில் எது தமிழ்நாட்டின் பொருளாதாரத்தின் அம்சம்?
A) கிராமத்திலிருந்து நகரங்களுக்கு அதிக இடப்பெயர்ச்சி
B) குறைந்த விவசாயம் சாரா வேலை வாய்ப்பு
C) அதிக நகர வளர்ச்சி
D) குறைந்த நகர வளர்ச்சி

*(Gr.I) – IDPC - 2011)*

882. பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும் போது சேவை துறையின் பங்கு, தேசிய வருமானத்தில்
A) அதிகரிக்கும்
B) குறையும்
C) மாற்றம் இருக்காது
D) விகிதாச்சாரத்தில் மாற்றம் இருக்காது

*(Gr.I) – IDPC - 2011)*

883. கீழ்க்கண்ட அமைப்புகளில் எந்த ஒன்றில் இந்தியா உறுப்பினராக உள்ளது?
A) ஆசிய வளர்ச்சி வங்கி
B) ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு
C) கொழும்பு திட்டம்
D) பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம் பாட்டு நிறுவனம்

*(Gr.I) – IDPC - 2011)*

884. தன்னார்வ அமைப்புகளுக்கு நிதியுதவி அளித்து உயர்த்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்
A) காதி மற்றும் கிராம தொழில் குழுமம்
B) இந்திய மக்களின் மேம்பாட்டிற்கான செயலமைப்பு
C) ஊரக தொழில்நுட்பம் மற்றும் மக்களின் செயலை முன்னேற்றுவதற்கான குழு
D) இவை அனைத்தும்

*(Gr.I) – IDPC - 2011)*

875......C 876....C 877....D 878 .... A 879......C 880.....C 881..... C 882 .... A 883 A&C 884.....D

885. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : பிராந்திய வளர்ச்சி வேறுபாடுகள், திட்டமிடுதல் மூலம் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது.

காரணம்(R) : இந்திய வேளாண் தொழில்நுட்பம் அளவு பொதுவானது. ஆனால் வளமை பொதுவானதல்ல.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு:

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

C) (A) சரி, ஆனால் (R) தவறு.

D) (A) தவறு, ஆனால் (R) சரி.

*(Gr.I) – IDPC - 2011)*

886. நிலச்சீர்திருத்தங்கள் கீழ்க்கண்ட எதை உட்கொண்டிருக்கவில்லை?

A) இடைத்தரகர்களை ஒழித்தல்

B) நில உடமைகளை ஒருங்கிணைத்தல்

C) கூட்டுறவு விவசாயம்

D) விவசாயிகளுக்கு வீட்டுக்கடன் அளித்தல்

*(Gr.I) – IDPC - 2011)*

887. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட வருடம்

A) *1978-79* B) *1979-80*

C) *1980-81* D) *1981-82*

*(Gr.I) – IDPC - 2011)*

888. இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கி எது?

A) இந்தியன் வங்கி

B) இந்தியன் ஒவர்சீஸ் வங்கி

C) கனரா வங்கி

D) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா

*(Gr.I) – IDPC - 2011)*

889. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : அட்டவணையின் அடிப்படை வகைப்படுத்துதல்.

காரணம்(R) : முதலில் விவரங்கள் வகைப் படுத்தப்படுகின்றன. பின்னர் அட்டவணையிடப்படுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு:

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

C) (A) சரி, ஆனால் (R) தவறு.

D) (A) தவறு, ஆனால் (R) சரி.

*(Gr.I) – IDPC - 2011)*

890. நேர்முக வரி என்பது கீழ்க்கண்டவற்றில் எது?

A) விற்பனை வரி

B) உற்பத்தி வரி

C) சுங்க வரி

D) இவற்றுள் எதுவுமில்லை

*(Gr.I) – IDPC - 2011)*

891. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : விளக்கப்படங்கள் ஒப்பிட்டுப் பார்க்க மட்டுமே பயன்படுகின்றன.

காரணம்(R) : விளக்கப்படங்களை கணித தொடர்பாக படிக்க இயலாது.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு:

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி.

B) (A) சரி, ஆனால் (R) சரியல்ல.

C) (A) சரியல்ல ஆனால் (R) சரி

D) (A) மற்றும் (R) இரண்டும் சரியல்ல

*(Gr.I) – IDPC - 2011)*

885.......B 886....D 887.....A 888 ....D 889.....A 890.....D 891.....A

**892.** தனிப்பட்ட இணைப் பொருளாதாரம் என்பது

I. கறுப்பு பொருளாதாரம்

II. கணக்கில் இல்லாத பொருளாதாரம்

III. கலப்பு பொருளாதாரம்

IV. முதலாளித்துவ பொருளாதாரம்

இவற்றுள் :

A) I மற்றும் II சரியானவை

B) I மட்டும் சரியானது

C) III மற்றும் IV சரியானவை

D) இவற்றுள் எதுவுமில்லை

*(Group – IA – AGGT - 2012)*

**893.** சுகாதார காப்பீட்டு வாணிபத்துடன் தொடர்புடையது?

A) ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

B) யூ.டி.ஐ.

C) ஜி.ஐ.சி.

D) மாநில வணிக நிறுவனம்

*(Group – IA – AGGT - 2012)*

**894.** மகலனோபிஸ் மாதிரியில் கனரக தொழிற்சாலைகளின் உற்பத்தி உபயோகிக்கப்படுவது

A) ஏற்றுமதி

B) கனரக தொழிற்சாலைகளை விரிவுப்படுத்த

C) கூலிப் பொருட்களை உற்பத்தி செய்ய

D) ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்ய

*(Group – IA – AGGT - 2012)*

**895.** மிகவும் நீர்மைத் தன்மை வாய்ந்த பணம் எது?

A) $M_1$ B) $M_2$ C) $M_3$ D) $M_4$

*(Group – IA – AGGT - 2012)*

**896.** தனிநபர் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி

A) நேர்முக வரி B) மறைமுக வரி

C) சொத்து வரி D) எதிர்முக விகிதவரி

*(Group – IA – AGGT - 2012)*

**897.** குடிசை மாற்று வாரியம் தமிழ்நாட்டில் எந்த வருடம் நிறுவப்பட்டது?

A) 1950 B) 1960 C) 1970 D) 1980

*(Group – IA – AGGT - 2012)*

**898.** கிறலிடப்பட்ட காசோலையை பணமாக்க

A) பாரத ஸ்டேட் வங்கியின் மூலமாக பெறலாம்

B) பணம் செலுத்துபவர் மூலமாக பெறலாம்

C) ஏதாவது ஒரு வங்கியின் மூலமாக பெறலாம்

D) இவற்றுள் எதுவுமில்லை

*(Group – IA – AGGT - 2012)*

**899.** மதிப்புகூட்டு வரி எதை சார்ந்தவை?

A) உற்பத்தி வரி B) வருமான வரி

C) எஸ்டேட் வரி D) விவசாய வருமான வரி

*(Group – IA – AGGT - 2012)*

**900.** அரசின் மக்கள் நலப்பணிக்கான மிகப்பெரிய நிர்வாக சவால்கள்

A) மக்கள்தொகை பெருக்கம் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் நிலை

B) சமுதாயச் சச்சரவுகள்

C) சுற்றுச்சூழல் மாசு

D) இவை அனைத்தும்

*(Group – IA – AGGT - 2012)*

**901.** பொது நிர்வாகத்தில் பன்னாட்டு கூட்டுறுவில் முக்கிய முவாண்மையாக எது உள்ளது?

A) வெளியுறவு அமைச்சரவை

B) பாதுகாப்பு அமைச்சரவை

C) நிர்வாக சீர்திருத்தம் மற்றும் குறைதீர்க்கும் துறை

D) இந்திய பொது நிர்வாக நிறுவனம்

*(Group – IA – AGGT - 2012)*

**902.** கீழ்கண்ட குறியீட்டெண்ணைக் கொண்டு சரியான இணையை தேர்வு செய்க.

| | | | |
|---|---|---|---|
| I. | பாரத நிர்மாண் | : | ஏழைகளின் அடிப் படை தேவை மற்றும் குடியிருப்பு |
| II. | ராஜீவ் ஆவாஸ் யோஜனா | : | குடியிருப்பு மற்றும் வீட்டின் மறுவளர்ச்சி மற்றும் மறுபுணர மைப்புக்கு துணையா யிருப்பது |
| III. | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புணரமைப்பு குழு | : | அடிப்படை சௌகரியங்கள் மற்றும் வளர்ச்சிக்கு தேவையான ஆதார அமைப்புகளின் கட்டுமானம் |

A) I மட்டும் B) II மட்டும்

C) II மற்றும் III மட்டும் D) I மற்றும் II மட்டும்

*(Group – II – HLT12 - 2012)*

**903.** ஒரு வளர்ந்து வரும் பொருளாதாரம் பின்வரும் குணநலன்களை பெற்றுள்ளது.

A) குறைந்த தலா விகித வருமானம், மோசமான வேலையின்மை மற்றும் தொழில் போக்கு

B) மக்கள்தொகை அழுத்தம்

C) (A) மட்டும்

D) (A)+(B)

*(Group – II – HLT12 - 2012)*

892.......A 893....A 894.....B 895....A 896......A 897.....C 898.....C 899....A 900....D 901.....C
902.......B 903....D

**904.** பணவாட்டம் என்பது விலையின் எந்த நிலையைக் குறிக்கும்?
A) விலை குறைதல்
B) விலை உயர்தல்
C) விலை நிலைப்படுத்தப்படுதல்
D) மிதமான விலை உயர்தல்
*(Group – II – HLT12 - 2012)*

**905.** ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிலவுகின்ற விலையின் அடிப்படையில் GDP-யை அளவிட்டால், அதைக் கிழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.
A) நடப்பு விலையில் GDP
B) அங்காடி விலையில் GDP
C) நிலையான விலையில் GDP
D) (A)+(B)+(C)
*(Group – II – HLT12 - 2012)*

**906.** உற்பத்தி முறை அடிப்படையில் அளவிடப்படும் GDP உள்ளடக்கியது
A) பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியின் போது உருவாக்கப்படும் வருமானம்
B) ஒரு குறிப்பிட்ட வருடத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பொருளின் மதிப்பையும் கூட்டுவது
C) முடிவு நிலையில் உள்ள பொருள்களின் மீதான செலவினை கூட்டுவது
D) மேற்சொன்ன எதுவும் அல்ல
*(Group – II – HLT12 - 2012)*

**907.** அதிக வட்டி வீதமானது ஒரு குடும்ப அமைப்பை சார்ந்தவரை ............ செய்ய தூண்டும். ஆனால் தொழில் நிறுவனங்களை ............
A) அதிகமான சேமிப்பு மற்றும் குறைவாக கடன் வாங்க தூண்டும்
B) குறைவான சேமிப்பு மற்றும் அதிகமான கடன் வாங்குதல்
C) அதிகமான சேமிப்பு மற்றும் அதிகமான கடன் வாங்குதல்
D) குறைவான சேமிப்பு மற்றும் குறைவான கடன் வாங்குதல்
*(Group – II – HLT12 - 2012)*

**908.** கிழ்க்கண்டவற்றுள் எது என்.பீ.எஃப்.ஐ (NBFIs) கிழ் வரும்?
A) வணிக வங்கிகள்
B) கூட்டுறவு வங்கிகள்
C) யு.டி.ஐ (UTI)
D) இவற்றுள் எதுவுமில்லை
*(Group – II – GGTM - 2012)*

**909.** பண அளிப்பில் $M_3 = M_1 +$
A) வங்கிகளின் நிகர கால வைப்புகள்
B) தபால் நிலையங்களில் உள்ள மொத்த சேமிப்பு வைப்புகள்
C) வங்கிகளின் நிகர தேவை வைப்புகள்
D) இவற்றுள் எதுவுமில்லை
*(Group – II – GGTM - 2012)*

**910.** பெரும்பாலும் பணவீக்கம் ஏற்படுவதற்கு காரணமாக அமைவது
A) அளிப்பு பக்க உந்துதல்கள் உற்பத்தியாளர்களின் செலவினை அதிகரிக்கின்றது
B) தேவை பக்க உந்துதல்கள் ஒரு நுகர்வோரின் செலவுகளை அழுத்துவது
C) பண அளிப்பின் அதிரடியான பெருக்கம்
D) தொழிற்சங்கங்களின் நியாயமில்லாத கூலி தேவைகள்
*(Group – II – GGTM - 2012)*

**911.** பண அளிப்பில் ஏற்படும் வளர்ச்சி வீத அதிகரிப்பு பொதுவாக இதனால் பின் தொடரும்
A) பொருளாதார பின்னடைவு
B) பொருளாதார நடவடிக்கையில் ஏற்படும் குறைவு
C) பொருளாதார பின்னடைவு மற்றும் பொருளாதார நடவடிக்கையில் ஏற்படும் குறைவு
D) பணவீக்கம்
*(Group – II – GGTM - 2012)*

**912.** PURA என்பது
A) நகர்ப்புற வசதிகளை கிராமங்களுக்கு செய்து கொடுப்பது
B) உலக முழுமையான வசதிகளை கிராமங்களுக்கு செய்து கொடுப்பது
C) நகர்ப்புற வசதிகளை ரூர்கேலா பகுதிக்கு செய்து கொடுப்பது
D) உலக முழுமையான வசதிகளை ரூர்கேலா பகுதிக்கு செய்து கொடுப்பது
*(Group – II – GGTM - 2012)*

**913.** பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி கிழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க:

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| a) மொத்த நாட்டு உற்பத்தி | 1. நாட்டில் வசிப்பவர்களால் உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி செய்யப் பட்ட வெளியீடு மதிப்பு |
| b) மொத்த உள்நாட்டு உற்பத்தி | 2. மொத்த நாட்டு உற்பத்தி- தேய்மானம் |
| c) நிகர நாட்டு உற்பத்தி | 3. மொத்த உள்நாட்டு உற்பத்தி-தேய்மானம் |
| d) நிகர உள்நாட்டு உற்பத்தி | 4. மொத்த உள்நாட்டு உற்பத்தி - வெளி நாடுகளின் மூலம் கிடைக்கும் வருமானம் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 1 | 2 | 3 | 4 |

*(Group – II – GGTM - 2012)*

904.......A 905....C 906.....B 907....A 908......C 909.....A 910.....C 911....D 912.....A 913.....C

914. மறைமுகவரிக்கு எடுத்துக்காட்டு
A) வருமான வரி
B) விற்பனை வரி
C) சொத்து வரி
D) அன்பளிப்பின் மீதான வரி
(Group – II – GGTM - 2012)

915. மத்திய அரசின் வரி சாரா வருவாயில் இல்லாதது எது ?
A) நிதிசார் பணிகள்
B) இலாபப் பங்குகள்
C) பொருளாதாரப் பயன் பணிகள்
D) சுங்கத் தீர்வுகள்
(Group – II – GGTM - 2012)

916. இயற்கையிலிருந்து நேரிடையாக வளங்களை பெறும் தொழில்
A) முதன்மை நிலைத் தொழில்
B) இரண்டாம் நிலைத் தொழில்
C) மூன்றாம் நிலைத் தொழில்
D) நான்காம் நிலைத் தொழில்
(Group – III – (CSS-II) - 2012)

917. கிழ்காண்பவற்றில் எது சரியாக பொருந்தி உள்ளது?
A) இந்திய ரிசர்வ் வங்கி — 1. வங்கிகளின் வங்கி
B) பணவெளியீட்டு உரிமை — 2. பாரதிய மாநில வங்கி
C) பொதுத்துறை வங்கி — 3. ஐ.சி.ஐ.சி.ஐ
D) பட்டியலிடப்படாத வங்கி — 4. ஐ.ஓ.பி.
(Group – III – (CSS-II) - 2012)

918. கிழ்கண்ட வாக்கியங்களைக் கவனி :
கூற்று (A) : பரஸ்பர நிதியகம் சிறு முதலீட்டாளர்களிடம் பெற்ற சேமிப்பினை கொண்டு பெரிய நிறுமங்களில் முதலீடு செய்கிறது.
காரணம் (R) : பரஸ்பர நிதியகம் "சிறு துளி பெரு வெள்ளம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இயங்குகிறது.
இவற்றுள் எது சரி என தீர்மானிக்கவும் :
A) (A) மற்றும் (R) இரண்டும் சரி.
B) (A) மற்றும் (R) இரண்டும் தவறு.
C) (A) தவறு, ஆனால் (R) சரி.
D) (A) சரி, ஆனால் (R) தவறு.
(Group – III – (CSS-II) - 2012)

919. சரியாக பொருந்துவதை தேர்ந்தெடுத்து எழுதுக :
(a) கரண்யா வரி — 1. $\frac{1}{5}$ பங்கு விலை
(b) பாலி வரி — 2. பூக்கள் விற்பனை
(c) காரா வரி — 3. மதம் சார்ந்த வரி
(d) வியாபார வரி — 4. பாசன வரி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 4 | 3 | 1 |

(Group – III – (CSS-II) - 2012)

920. பொருத்துக :
(a) போர்ச்சுக்கீசிய வாணிப தளம் — 1. கோவா
(b) டச்சு வாணிப தளம் — 2. தரங்கம்பாடி
(c) டேனியர் வாணிப தளம் — 3. பழவேற்காடு
(d) பிரெஞ்சு வாணிப தளம் — 4. மசூலிப்பட்டிணம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 3 | 4 |
| B) | 1 | 3 | 2 | 4 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 4 | 1 | 3 | 2 |

(Group – III – (CSS-II) - 2012)

921. கிழ்காண்பவற்றில்
I. பொருளாதார ஆதிக்கம் சிலரிடம் குவிதலை கட்டுப்படுத்தப்படுகிறது.
II. அத்தியாவசிய துறைகள் பொது துறையிடம் மட்டும்
III. சேவையே பொதுத்துறை அமைப்பின் நோக்கம்
IV. பொதுத்துறை அமைப்புகள் பொதுவாக எவ்வித போட்டியாளர்களும் இல்லை
எது தவறான விடை :
A) I மற்றும் II தவறு
B) IV மட்டுமே தவறு
C) III, IV தவறு
D) I, III தவறு
(Group – III – (CSS-II) - 2012)

922. கிழ்கண்டவைகளை கவனி :
கூற்று (A) : வங்கிகளுக்கிடையே உள்ள கடன்கள், ரிசர்வ் வங்கி மூலம் எளிதாக தீர்க்கப்படுகின்றன.
காரணம் (R) : ரிசர்வ் வங்கியான அனைத்து வங்கிகளின் மைய வங்கி என்ற நிலையில் மைய தீர்வகமாக செயலாற்றுகிறது.
இவைகளில் எது சரி :
A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல.
B) (A) சரி (R), (A) க்கு சரியான விளக்கம் அல்ல.
C) (A) வும், (R) இரண்டும் தனித்தனியே சரி. (A) க்கு (R) என்பது சரியான விளக்கம்.
D) (A) (R) இரண்டும் தவறு.
(Group – III – (CSS-II) - 2012)

923. WTO எத்துறையுடன் தொடர்புடையது?
A) மருத்துவம்
B) வாணிகம்
C) வங்கி
D) கல்வி
(Group – III – (CSS-II) - 2012)

914.......B 915....B 916.....A 917....A 918......A 919.....A 920.....B 921....B 922.....C 923.....B

**924.** பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி கிழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல்-I | பட்டியல்-II |
|---|---|
| (a) லயோனல் ராபின்சு | 1. செல்வ இலக்கணம் |
| (b) ஆடம் ஸ்மித் | 2. பொருளாதார இலக்கணம் |
| (c) ஆல்பிரட் மார்ஷல் | 3. வளர்ச்சி இலக்கணம் |
| (d) சாமுவேல்சன் | 4. கிடைப்பருமை இலக்கணம் |

குறியீடுகள்:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 3 | 4 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 1 | 2 | 3 | 4 |

*(Group – III – (CSS-II) - 2012)*

**925.** ரங்கராஜன் கமிட்டி இதற்காக உருவாக்கப்பட்டது?
A) பொதுப் பங்கிட்டு முறையை மேம்படுத்த
B) வருமான செல்வ ஏற்றத்தாழ்வினைக் குறைக்க
C) கிராமப்புற வேலைவாய்ப்பினை அதிகரிக்க
D) பொதுத்துறை நிறுவனங்களின் பங்குவிலக்கல் தொடர்பாக

*(Group – III – (CSS-II) - 2012)*

**926.** கிழ்க்கண்ட வாக்கியங்களை கவனி :
கூற்று (A) : "பணவீக்கம் அநீதியானது, பணவாட்டம் திமையானது".
காரணம் (R) : பணவீக்கம் நுகர்வோர்களை பாதிக்கும் பணவாட்டம் வேலையில்லா திண்டாட்டத்திற்கு வழிவகுக்கும்.
இவற்றுள் எது சரி என தீர்மானிக்கவும் :
A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
C) (A) சரி, ஆனால் (R) தவறு.
D) (A) தவறு, ஆனால் (R) சரி.

*(Group – III – (CSS-II) - 2012)*

**927.** பொருத்துக :

| | |
|---|---|
| (a) நகர்நுழை வரி | 1. சுற்றுலா ஏற்பாட்டாளர் |
| (b) தொழில்வரி | 2. வியாபாரி |
| (c) சேவை வரி | 3. சிமெண்ட் உற்பத்தியாளர் |
| (d) மதிப்புக் கூட்டுவரி | 4. மருத்துவத்துறை வல்லுநர்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 3 | 1 |
| B) | 3 | 2 | 4 | 1 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 4 | 2 | 3 | 1 |

*(Group – III – (CSS-II) - 2012)*

**928.** வரிசை I ஐ வரிசை II உடன் பொருளறிந்து சரியானதைப் பொறுத்துக :

| | |
|---|---|
| (a) MDM | 1. கிராமப்புற சுகாதாரம் |
| (b) SSA | 2. இடைநிலைக் கல்வி |
| (c) RMSA | 3. மதிய உணவு |
| (d) | NRHM 4. |

ஆரம்பக் கல்வி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 4 | 2 | 3 | 1 |
| D) | 1 | 4 | 2 | 3 |

*(Group – III – (CSS-II) - 2012)*

**929.** கிழ்க்கண்டவற்றுள் 'தொழில் வளர்ச்சி மற்றும் நிதியுதவி' என்ற துறையின் கிழ்வராத நிறுவனம் எது?
A) டிட்கோ B) சிப்காட்
C) டிக் D) ஐடிசி

*(Group – IV – SGSY - 2012)*

**930.** பொதுத்துறை நிறுவனத்தின் கிழ் வராத எண்ணெய் நிறுவனம் கிழ்க்கண்டவற்றுள் எது?
A) சென்னை பெட்ரோலியம் கம்பெனி
B) மங்களூர் சுத்திகரிப்பு & பெட்ரோ கெமிக்கல்ஸ்
C) இந்துஸ்தான் ஆயில் கம்பெனிகள்
D) ரிலையன்ஸ் பெட்ரோலியம் லிமிடெட்

*(Group – IV – SGSY - 2012)*

**931.** கிழ்க்காணும் வரிகளில் எது நேர்முக வரி அல்ல என்பதை குறிப்பிடுக?
A) வருமான வரி B) விற்பனை வரி
C) வெகுமதி வரி D) சொத்து வரி

*(Group – IV – SGSY - 2012)*

**932.** எந்த வரியில் வரி நிகழ்வும் வரிச்சுமையும் ஒருவர் மீதே விழுகிறது?
A) வருமான வரி B) விற்பனை வரி
C) மதிப்புக் கூட்டுவரி D) சேவைக் கட்டணம் (வரி)

*(Group – IV – SGSY - 2012)*

**933.** நுகர்வு என்ற பட்சத்தில் 'அபரிகரக' என்பதின் பொருள்
A) தேவைகளைக் கட்டுப்படுத்துதல்
B) குறைந்தபட்ச தேவைகளை பூர்த்தி செய்தல்
C) எது தேவையோ அவற்றை மட்டும் பூர்த்தி செய்தல்
D) இவை அனைத்தும்

*(Group – IV – SGSY - 2012)*

**934.** பின்வருவனவற்றுள் இந்திய ரிசர்வ் வங்கியின் பணி அல்லாதது எது?
A) பல்வேறு மதிப்பிலான ரூபாய் நோட்டுக்களை வழங்குதல்
B) அரசாங்கத்திற்கான வங்கியாகச் செயல்படுதல்
C) வங்கிகளின் வங்கியாகச் செயல்படுதல்
D) தனி நபர்களுக்குக் கடன் வழங்குதல்

*(Group – IV – SGSY - 2012)*

924....... B 925....D 926..... A 927 .... C 928 ...... A 929..... D 930..... D 931 .... B 932 ..... A 933..... D
934...... D

**935.** இந்திய ரிசர்வ் வங்கி பண அளிப்பை பின்வரும் அடிப்படைகளில் கணக்கிடுகிறது. M1, M2, M3, M4 இவற்றிற்குரிய பின்வரும் விளக்கங்களில் எது சரியானது அல்ல?

A) ஞூ = மக்களிடையே உள்ள பணப்புழக்கம் + வங்கியின் கேட்பு வைப்புத் தொகை
B) $M_2$ = $M_1$ + அஞ்சலக சேமிப்பு வைப்புத் தொகை
C) $M_3 = M_1 + M_2$
D) $M_4$ = $M_3$ + ஒட்டு மொத்த அஞ்சலக வைப்புத் தொகை

*(Group – VII – SGTS - 2012)*

**936.** அரசாங்க முதலீட்டு கொள்கையில் 'PPP' என்பது என்ன?

A) அரசு மற்றும் தனியார் முதலீட்டு திறன்
B) உற்பத்தி மற்றும் வாங்கும் திட்டம்
C) தனியார் மற்றும் அரசு கூட்டமைப்பு
D) வாங்கும் திறன் அளவு

*(Group – VII – SGTS - 2012)*

**937.** 'கேல்கர்' கமிட்டி என்பது எதற்காக அமைக்கப் பட்டது?

A) வங்கி மறுசீரமைப்பு
B) குழுமங்களின் மறுசீரமைப்பு
C) வரிக்கொள்கை மறுசீரமைப்பு
D) நிர்வாக மறுசீரமைப்பு

*(Group – VII – SGTS - 2012)*

**938.** கூட்டுறவு வேளாண்மை

A) சுய உதவிக்குழுக்கள் இணைந்து கூட்டுறவுக் கொள்கையை வேளாண்மையில் அமுல்படுத்துவது
B) விவசாயிகள் இணைந்து கூட்டுறவுக் கொள்கையை வேளாண்மையில் அமுல்படுத்துவது
C) சிறிய நிதி நிறுவனங்கள் இணைந்து கூட்டுறவுக் கொள்கை அமுல்படுத்துவது
D) வேளாண்மை வளர்ச்சியை ஊக்கப்படுத்து வதற்கான தொழில் முனைவோர்களின் குழு

*(Group – VII – SGTS - 2012)*

**939.** இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடு கீழ்க்கண்ட எந்த நாட்டிலிருந்து அதிகமாக பெறப்படுகிறது?

A) USA (அமெரிக்க ஐக்கிய நாடு)
B) UK (ஐக்கிய அரசு)
C) சிங்கப்பூர்
D) மொரீஷியஸ்

*(VAO – 2012)*

**940.** இந்திய ரிசர்வ் வங்கியிடம் ஒவ்வொரு வங்கியும் ஒரு குறிப்பிட்ட தொகையை ரொக்க இருப்பாக வைப்பது ............. என்று பெயர்

A) மாறுபடும் காப்பு விகிதம்
B) ரொக்க காப்பு விகிதம்
C) ரொக்கத் தள்ளுபடி விகிதம்
D) வியாபாரத் தள்ளுபடி விகிதம்

*(VAO – 2012)*

**941.** பொருட்கள் மாநிலத்திலிருந்து மாநிலம் கொண்டு செல்லும் போது வசூலிக்கப்படும் வரி

A) ஏற்றுமதி வரி B) நகர்நுழை வரி
C) சுங்க வரி D) இறக்குமதி வரி

*(VAO – 2012)*

**942.** பின்வருவனவற்றுள் எது நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் சரியான முறை அல்ல என்று தேர்ந்தெடுக்கவும்?

A) உற்பத்தி முறை
B) வருமான முறை
C) வரவு செலவு திட்ட முறை (பட்ஜெட் முறை)
D) செலவின முறை

*(VAO – 2012)*

**943.** பணவீக்கம் கீழ்க்கண்ட நிலையைக் குறிக்கும்

A) விலைவாசி உயர்வும்- பணத்தின் மதிப்பு வீழ்ச்சியும்
B) விலைவாசி உயர்வும் - பணத்தின் மதிப்பு உயர்வும்
C) விலைவாசி வீழ்ச்சியும்-பணத்தின் மதிப்பு வீழ்ச்சியும்
D) விலைவாசி வீழ்ச்சியும்-பணத்தின் மதிப்பு உயர்வும்

*(VAO – 2012)*

**944.** இருமுறைக் கணக்கிடுதல் என்பது

**I.** உற்பத்தியின் இறுதிநிலைப் பொருட்களின் மதிப்பை மட்டும் கணக்கிடுதல்
**II.** உற்பத்தியின் ஒவ்வொரு நிலையிலும் ஒரு பொருளின் மதிப்பைக் கணக்கிடுதல்
**III.** ஒரு பொருளின் மதிப்பை ஒரு தடவைக்கு மேலாகக் கணக்கிடுதல்

A) I மட்டும் B) III மட்டும்
C) I மற்றும் II D) I மற்றும் III

*(Group – I – DC12 – 2013)*

**945.** எந்த ஐந்தாண்டு திட்டத்தில் அடிப்படை மற்றும் உயர்ரக தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது?

A) I B) II C) III D) IV

*(Group – I – DC12 – 2013)*

**946.** திட்டக்குழு துவக்கப்பட்ட ஆண்டு?

A) 1947 B) 1948 C) 1949 D) 1950

*(Group – I – DC12 – 2013)*

**947.** விவசாய விலை குழு எந்த ஆண்டு தொடங்கப் பட்டது?

A) 1950 B) 1955 C) 1965 D) 1975

*(Group – I – DC12 – 2013)*

**948.** எந்த ஆண்டு தேசிய விவசாய காப்பீட்டு திட்டம் தொடங்கப்பட்டது?

A) 1979-1980 B) 1989-1990
C) 1999-2000 D) 2009-2010

*(Group – I – DC12 – 2013)*

935.......C 936....C 937.....C 938....B 939.....D 940.....B 941.....B 942....C 943.....A 944.....B
945.......B 946....D 947.....C 948....C